SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 17 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, ஜுலை 23 - 29, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- ஆண்டு சந்தா - ரூ.260/-

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்ரிங்

# “தேடினால்.. தேடாததெல்லாம் கிடைக்கும்”



நிகழ்வை குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கிறார் சிறப்பு விருந்தினர் வி.ஆர்.முத்து. அருகில் எஸ்.என்.எஸ். கல்விக் குழுமத்தின் தலைவர் எஸ்.என்.சுப்பிரமணியன், கல்லூரியின் தாளாளர் எஸ்.இராஜலட்சுமி மற்றும் கல்லூரி முதல்வர் செந்தூர்பாண்டியன்.

✍ தி கோவை மெயில்

எஸ்.என்.எஸ். தொழில்நுட்பக் கல்லூரியில் மேலாண்மைக் கல்வித் துறை சார்பில் ‘டூர் டி போர்ஸ்’ என்ற தேசிய அளவிலான மேலாண்மை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த மேலாண்மை நிகழ்வில் சிறந்த மேலாண்மைக் குழு, புகைப்படம் எடுத்தல், படைப்பு விளம்பரம் தயாரித்தல், கால்பந்து, திறமையறிதல், புதையல் வேட்டை உட்பட பல்வேறு குழு போட்டிகள் நடைபெற்றது.

நிகழ்வின் துவக்க விழாவில் எஸ்.என்.எஸ். கல்விக் குழுமத்தின் தலைவர் எஸ்.என்.சுப்பிரமணியன், கல்லூரியின் தாளாளர் எஸ்.இராஜலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக ‘வி.வி. அண்ட் சன்ஸ் எடிபிள் ஆயில் லிமிடெட்’ தலைவர் வி.ஆர்.முத்து கலந்துகொண்டு பேசுகையில், ‘எஸ்.என்.எஸ். கல்லூரி மிகவும் தனித்துவமான கல்லூரி ஆகும். இங்கு மாணவர்களுக்காக மேற்கொள்ளும் சின்னஞ்சிறு செயல்களிலும் மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். அதனால்தான் ஒரு கல்வி நிறுவனம், பதினொரு கல்வி நிறுவனமாகியுள்ளது. இன்னும் நிறைய கல்வி நிறுவனங்களைத் தொடங்கி மென்மேலும் உயர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நீங்கள் தரமானப் பொருட்களை உற்பத்தி செய்தால் நமது நாட்டின் பிரதமரும் உங்களின் வாடிக்கையாளராக மாறிவிடுவார். பிரதமர் அண்மையில் மாஸ்கோ சென்றிருந்தபோது அங்கு அவரது உணவுத் தயாரிப்புக்காக தமிழ்நாட்டில் இருந்து இதயம் நல்லெண்ணெய் போயிருக்கிறது. இதற்காக தமிழர்கள் நாம் அனைவரும் பெருமை அடைய வேண்டும். எனவே, எதிலும் தரம் மிக முக்கியம்.



வி.ஆர்.முத்து

தேடினால் தேடாததெல்லாம் கிடைக்கும். ஒருவர் பல மணிநேரம் ஒரு பொருளைத் தேடும்போது எதிர்பாராமல் அவருக்குத் தேடாத பொருள் ஒன்று கிடைக்கும். உதாரணமாக, அலெக்சாண்டர் கிரகாம்பெல் தன் மனைவிக்கு காது கேட்கும் கருவியை உருவாக்க முயற்சிக்கும்போதுதான் டெலிபோனைக் கண்டு பிடித்தார். அதுபோல், நீங்கள் உங்கள் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து தேடினால் தேடாத வெற்றித் தானாக கிடைக்கும்.

தமிழ்நாட்டில் மட்டுமே எங்கள் பாரம்பரிய நல்லெண்ணெய் விற்பனை செய்து வந்த நிலையில், தற்போது வடமேற்கில் உள்ள டொரான்டோ முதல் தென்கிழக்கில் உள்ள சிட்னி வரை எங்கள் இதயம் நல்லெண்ணெய் தன் விற்பனை எல்லையை எட்டியுள்ளது.’ என்றார்.

இந்நிகழ்வில், நாடு முழுவதும் உள்ள 31 கல்வி நிறுவனங்களில் இருந்து 1,274 மாணவர்கள் கலந்துகொண்டனர். போட்டி நிகழ்வுகளில், ராஜலக்ஷ்மி கலை கல்லூரி மாணவர்கள் சிறந்த நிர்வாகக் குழு நிகழ்வில் முதலிடமும், இணைப்புகள் மற்றும் புகைப்படம் எடுத்தல் நிகழ்வுகளில் இரண்டாம் இடத்தையும் பெற்று ஒட்டுமொத்த பரிசுக்கோப்பையை வென்றனர். மேலும் பல கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு சாதனை படைத்தனர். வெற்றி பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

எஸ்.என்.எஸ். தொழில்நுட்ப கல்லூரி இயக்குநர் அருணாச்சலம், கல்லூரி முதல்வர் செந்தூர்பாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.














## மாணவர்களின் சிந்தனைகளை வடிவமைக்கக் கூடிய இடம்தான்

# எஸ்.என்.எஸ். கல்லூரி

### தொழில்நுட்ப இயக்குநர் எஸ்.நளின் விமல்குமார் பேச்சு



எஸ்.நளின் விமல்குமார்.



நிகழ்வை குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கிறார் கல்லூரித் தாளாளர் எஸ்.ராஜலட்சுமி. அருகில் எஸ்.என்.எஸ். கல்விக் குழுமத் தலைவர் சுப்ரமணியன், கல்லூரி முதல்வர் அனிதா ஆகியோர்.



இயக்குநர் லோகேஷ் கனகராஜ்

எஸ்.என்.எஸ். இராஜலட்சுமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா அண்மையில் நடைபெற்றது.

கல்லூரித்தாளாளர் எஸ்.ராஜலட்சுமி மற்றும் சிறப்பு விருந்தினர் கோயமுத்தூர் கிணத்துக்கடவு பகுதியைச் சேர்ந்த தமிழ் திரைப்பட இயக்குநர் லோகேஷ் கனகராஜ் ஆகியோர் விழாவைக் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தனர். கல்லூரி முதல்வர் அனிதா வரவேற்புரை வழங்கினார்.

எஸ்.என்.எஸ். கல்விக் குழுமத் தலைவர் சுப்ரமணியன் தலைமை உரையாற்றிப் பேசுகையில், ‘மாதா, நமது முதல் தெய்வம். அதற்கடுத்துத்தான் மற்றவர்கள். நமது சிறப்பு விருந்தினர் லோகேஷ் கனகராஜ் உங்களைப் போன்றுதான் கோயமுத்தூர் கல்லூரியில் பேஷன் டெக்னாலஜி, எம்.பி.ஏ. மாணவராக இருந்து, வங்கியில் பணிபுரிந்து அதன்பின்னர் முதல்முறை இயக்குநராக தன்னை முன்னிலைப்படுத்தி தற்போது இந்தியத் திரைத்துறையின் முக்கியமான ஒரு இயக்குநராக உருவாகி இருக்கிறார்.

திரைத்துறையில் விருப்பமுள்ள பெரும்பாலானவர்கள் இயக்குநர் மற்றும் நடிகராக சென்னை செல்கின்றனர். அவர்களுக்கு கோயமுத்தூரிலேயே ஸ்டுடியோ அமைத்துத்தர வேண்டும் என லோகேஷ் கனகராஜ் தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். கோயம்புத்தூர், சினிமாத் துறையில் மீண்டும் சிறந்து விளங்க நாங்கள் முயற்சிகளை எடுப்போம்.

நீங்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள், உங்கள் திறமை தனித்துவமானது. நீங்கள் முயற்சி செய்தால், உங்கள் ஆசைகள் எல்லாம் நிறைவேறும். உங்கள் கனவுகளைப் பெரிதுபடுத்துங்கள், உங்கள் வாழ்வில் உயரப் பறக்கலாம்’ என்றார்.

அதன்பிறகு அவர், இயக்குநர் லோகேஷ் கனகராஜ்க்கு சால்வை அணிவித்தார். ஒரு மாணவர் வரைந்த அவரது உருவ ஓவியம் இயக்குநருக்குப் பரிசாக வழங்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர் லோகேஷ் கனகராஜ் பேசியதாவது, ‘எனக்கு இந்த சரவணம்பட்டியில் ஒரு சிறப்பு விஷயம் உள்ளது. ஏனெனில், நான் முதன்முதலில் இப்பகுதியில்தான் தங்கியிருந்து பணிபுரிந்தேன். இனிவரும் மூன்று ஆண்டுகள்தான் வாழ்க்கையில் உங்களுக்கு மிக முக்கியமான காலகட்டம். என்ன படிக்கிறோம், எப்படி படிக்கிறோம், எவ்வளவு மதிப்பெண் எடுத்தோம் என்பதைவிட வாழ்க்கையில் கிடைக்கும் அனுபவமே சிறந்தது.

சினிமாவில் நீங்கள் என்னவாக வர வேண்டும் என்பதை நீங்கள் முதலில் முடிவு செய்யுங்கள். பின்னர் அதற்குண்டான வழிகள் தானாகவே உங்களுக்குத் தெரியும். கோயமுத்தூரில் படிக்கும் மாணவர்களுக்குத் திரைத்துறை சார்ந்த வாய்ப்புகள் கிடைக்க வேண்டும். அதற்குண்டான முயற்சிகளை கல்வி நிறுவனங்கள் எடுத்தால் என்னால் முடிந்ததை செய்வேன். இன்றைய மாணவர்களாகிய உங்களுக்கு நிறைய விஷயங்கள் தெரிந்து இருக்கிறது. சினிமாவை சினிமாவாக பாருங்கள். அரசியலை அரசியலாகப் பாருங்கள். உங்களை யாரும் சுலபமாக ஏமாற்ற முடியாது. அதற்கு நவீனத் தொழில்நுட்பம் உங்களுக்கு உதவி புரிகிறது. எங்கள் கல்லூரிப் பருவத்தில் இவை எல்லாம் சாத்தியமில்லை.

இரும்புக் கை மாயாவிதான் என் கனவுப்படம். முதன்முதலாக ஒரு நிறுவனத்தில் வேலைக்குப் போகும்போது அங்கு உங்களுக்கு நடப்பதை அனுபவமாகப் பார்த்தால் வெற்றி உங்களுடையதாகும். வாழ்க்கையில் நடப்பதை உற்றுக் கவனிக்க வேண்டும். அப்படி கவனித்து, கற்றுக்கொள்ளும் மனநிலையில் இருந்தால் வாழ்க்கை அழகாக இருக்கும்.



குறும்படம் எடுக்க நினைக்கும் மாணவர்கள், ஒரு கதையைத் தேர்ந்தேடுத்து பின்னர் உங்களுக்காக ஒரு அணியை உருவாக்கி, கேமராவை எடுத்துக்கொண்டு முயற்சி செய்து அப்படத்தை வெளியிட்டாலே நீங்களும் இயக்குநர்தான். அது குறும்படம், திரைப்படம் என்றெல்லாம் இல்லை, செய்யும் வேலை மீது எல்லோருக்கும் பயத்தைவிட, மரியாதையும், உண்மையும் இருக்க வேண்டும். நினைத்ததை முடிக்கத் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள், முடிவு நல்லதாக இருக்கும். அதற்கு முதலில் உங்கள் மனது சொல்வதை செய்யுங்கள். நன்றாகப் படியுங்கள்’ என்றார்.

பின்னர் அவர், மாணவர்களின் ஒவ்வொரு கேள்விகளுக்கும் பொறுமையுடன் பதில் அளித்தார். பள்ளி அளவில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு அவர் பரிசு வழங்கினார்.


கல்லூரியின் தொழில்நுட்ப இயக்குநர் எஸ்.நளின் விமல்குமார் பேசுகையில், ‘எவருக்கும் பின்புலம் என்பது முக்கியம் இல்லை. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக, இயக்குநர் லோகேஷ் கனகராஜ் உள்ளார். உங்களது சிந்தனைதான் மிகப்பெரிய ஆயுதம். உங்களது சிந்தனைகளை வடிவமைக்கக் கூடிய இடம்தான் எஸ்.என்.எஸ். கல்லூரி’ என்றார்.

கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி டேனியல் பேசுகையில், ‘நீங்கள் பல விஷயங்களை எதிர்பார்த்து இந்தக் கல்லூரியில் சேர்ந்திருப்பீர்கள். உங்களது தேவைகளையும் ஆசைகளையும் இக்கல்லூரி நிறைவேற்றும். எங்கேயும் எப்போதும் நீங்கள் ஏமாற மாட்டீர்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் தினசரி புத்தகம் வாசிக்கும் பழக்கம் இருக்க வேண்டும். புதிதாகவும் வித்தியாசமாகவும் சிந்திக்க வேண்டும். அப்போதுதான் இன்றைய போட்டி நிறைந்த உலகில் வெற்றிபெற முடியும்’ என்றார்.

கல்லூரியின் கல்வி நிபுணர் ஞானசேகரன் முதலாமாண்டு மாணவர்களுக்குதனது அறிவுரைகளைக் கூறினார். பின்னர் கல்லூரியின் அனைத்துத் துறைத் தலைவர்கள் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். துணை முதல்வர் நரேஷ்குமார் நன்றி கூறினார். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

# வாழ்வில் நிறைவடைவது எப்படி?

தி கோவை மெயில்



**உங்கள் செயல்கள் உங்கள் உணவு அல்லது வசதிகளுக்காக செய்யப்படவில்லை; அவை அனைத்தும் நிறைவைத் தேடி செய்யப்பட்ட செயல்கள். இது விழிப்புணர்வுடனோ அல்லது விழிப்புணர்வு இல்லாமலோ நடந்திருந்தாலும், செயல்கள் வரம்பற்ற தேடலையே குறிக்கின்றன.**

நாம் அனைவரும் வாழ்வில் நிறைவும், மகிழ்ச்சியும் காண்பதற்கு விரும்புகிறோம். மனிதர்கள் வெளிப்புறச் செயல்களால் இதை பூர்த்தி செய்துகொள்ள நினைப்பது பயனற்றது என்று அழுத்தமாகக் கூறி, அதற்கான வழியையும் காட்டுகிறார் சத்குரு.

சத்குரு: நிறைவு என்பது ஏதோ ஒரு செயலின் மூலம் அடையக்கூடியதல்ல. நீங்கள் கவனித்துப் பார்த்தால், உங்கள் வாழ்க்கையின் பல கட்டங்களில், “இது மட்டும் நிகழ்ந்துவிட்டால் என் வாழ்க்கை முழுமையடைந்துவிடும்”, என்று நீங்கள் எண்ணியிருப்பீர்கள். நீங்கள் ஒரு குழந்தையாக இருந்தபோது, “இந்த பொம்மை எனக்குக் கிடைத்துவிட்டால், எனக்கு அது போதும்”, என்று நினைத்தீர்கள். உங்களுக்கு அது கிடைத்த பிறகு, சில வாரங்களில் அதன்மேல் உங்களுக்கு இருந்த கவனம் போய்விடும், வாழ்க்கையும் நிறைவடைந்து இருக்காது. நீங்கள் பள்ளிக்கூடத்தில் இருந்தபோது, தேர்வில் வெற்றியடைந்தால் வாழ்க்கை முழுமை பெற்றுவிடும் என்று நினைத்தீர்கள். அது நிகழ்ந்தது, ஆனால் வாழ்க்கை நிறைவடையவில்லை. அதன்பிறகு, உங்களது கல்வியை முடித்துவிட்டால் உங்கள் வாழ்க்கை முழுமையாகிவிடும் என்று நினைத்தீர்கள். அதுவும் நிகழ்ந்தது. பிறகு, உங்கள் சொந்தக் காலில் நிற்க முடியவில்லை என்றால், இந்தக் கல்வியினால் எல்லாம் என்ன பயன்? என்று நினைத்தீர்கள். அது நிகழ்ந்தது. மூன்று மாதங்கள் கழிந்தபிறகு, கழுதையைப்போல் வேலை பார்ப்பதால் என்ன பயன்? என்று நினைக்கத் துவங்கினீர்கள். பின் உங்கள் இதயத்திற்கு நெருக்கமான அந்த ஆணையோ அல்லது பெண்ணையோ மணம் புரிந்துகொண்டால் வாழ்க்கை முழுமை அடைந்துவிடும் என்று நினைத்தீர்கள். அதுவும் நிகழ்ந்தது, அதற்குப் பிறகு என்ன ஆனது என்பது உங்களுக்கே தெரியும்!

நீங்கள் எந்த செயலைச் செய்திருந்தாலும், வாழ்க்கை எந்த நிறைவையும் அடையவில்லை. நீங்கள் செய்யும் சில செயல்களால் அது நிறைவடையாது. உங்கள் உள் இயல்பு முழுமையடைந்தால் மட்டுமே, உங்கள் வாழ்க்கை நிறைவு பெறும். உங்கள் உள் இயல்பு எல்லையற்றதாக இருந்தால், உங்கள் வாழ்க்கையும் எல்லையற்றதாக இருக்கும். இப்படி எல்லையற்றவராக நீங்கள் இருந்தால், நீங்கள் கண்களை மூடியபடி அமர்ந்திருக்கலாம் அல்லது வெவ்வேறு செயல்களில் ஈடுபடலாம். எப்படி இருந்தாலும் உங்கள் வாழ்க்கை நிறைவானதாகவே இருக்கும். ஒரு மனிதன் தன் வாழ்வில் எந்த செயலையும் செய்ய வேண்டிய அவசியமில்லை எனும் நிலையை தனக்குள் அடைந்தபிறகு, வெளி சூழ்நிலைக்கு என்ன தேவையோ, அந்த அளவுக்கு மட்டும் அவனது செயல்கள் இருக்குமேயானால், அந்த மனிதன் முழுமையடைந்தவனாகிறான்.

தயவுசெய்து பாருங்கள், நீங்கள் ஏன் அடுத்தடுத்து செயல் செய்துகொண்டே இருக்கிறீர்கள்? வாழ்க்கை நிறைவை நோக்கி. சிலர் அதிகப்படியான செயலைச் செய்து கொண்டிருப்பார்கள். அவர்கள் ஏன் அப்படி செய்கிறார்கள் என்று நீங்கள் அவர்களிடம் கேட்டால், அவர்கள், “என்ன செய்வது? உணவு, மனைவி, குழந்தைகள் அவர்களை யார் கவனித்துக்கொள்வார்கள்? ”உண்மை என்னவென்றால், நீங்கள் அவருடைய எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்தாலும், இந்த நபரால் ஒருநாள் கூட அமைதியாக உட்கார முடியாது. அவரால் மூன்று மணி நேரம் கூட உட்கார முடியாது! அவர் ஏதாவது செய்ய வேண்டும். ஏனென்றால், உங்கள் உள் இயல்பு நிறைவடையவில்லை, மேலும் இதை புற செயல்களின் மூலம் முழுமையாக்க முயற்சிக்கிறீர்கள். உங்கள் செயல்கள் உங்கள் உணவு அல்லது வசதிகளுக்காக செய்யப்படவில்லை; அவை அனைத்தும் நிறைவைத் தேடி செய்யப்பட்ட செயல்கள். இது விழிப்புணர்வுடனோ அல்லது விழிப்புணர்வு இல்லாமலோ நடந்திருந்தாலும், செயல்கள் வரம்பற்ற தேடலையே குறிக்கின்றன.

உங்களுக்குள், உங்களது உள்நிலை இயல்பானது நிறைவடைந்திருந்தால், செயலுக்கான தேவை இருக்காது. வெளிச்சூழ்நிலைக்கு ஏதேனும் செயல் தேவைப்பட்டால், நீங்கள் அதை ஆனந்தமாக செய்துகொள்ள முடியும். அது தேவைப்படவில்லை என்றால், கண்களை மூடி வெறுமனே உட்கார்ந்துகொள்ள முடியும். எந்த செயலும் செய்யத் தேவைப்படாத ஒரு நிலையை ஒரு நபர் அடைந்துவிடும்போது, அந்த நபர் எல்லையின்மையை அடைந்துவிட்டார் என்று நாம் கூறமுடியும். இந்த நபர் எந்த ஒரு வேலையும் செய்யத் தேவையில்லை என்பது அதற்கு அர்த்தமல்ல. வெளிச்சூழ்நிலைக்குத் தேவைப்பட்டால், அவர் இருபத்தி நான்கு மணி நேரமும் வேலை செய்யமுடியும். ஆனால் அவரது உள் நிலையின் தன்மைக்கு செயல் தேவைப்படுவதில்லை. செயலுக்குக் கட்டுப்பட்டு அவர் இருக்கவில்லை. செயல் இல்லாத நிலையிலும்கூட அவர் அதேபோல் இருக்கிறார்.

## ‘எப்பொழுது சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் வந்தாலும் அதிமுக வெற்றி பெறும்’



காய்கறி மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, செ.ம.வேலுசாமி மற்றும்சட்டமன்ற உறுப்பினர்கள்.

தி கோவை மெயில்

தமிழகத்தில் நிலவும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் காய்கறிகளின் விலை உயர்வைக் கண்டித்து அதிமுக சார்பில் கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் செ.ம.வேலுசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் பி.ஆர்.ஜி.அருண்குமார், அம்மன் அர்ச்சுனன், தாமோதரன், ஏ.கே.செல்வராஜ், ஜெயராமன், கந்தசாமி, அமுல் கந்தசாமி உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். மேடையில் நின்றிருந்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி உட்பட சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோர் கழுத்தில் காய்கறி மாலை அணிந்து தமிழக அரசுக்கு எதிராகவும் விலைவாசி உயர்வைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த எஸ்.பி.வேலுமணி, ‘கடுமையான விலைவாசி உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்வை அறிக்கை மூலமும் ஊடகங்கள் மூலமும் எடப்பாடியார் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்ந்தால் உடனடியாக நிதி உதவி செய்து, கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவுத் துறை மூலமாக விலை அதிகமாக இருக்கக்கூடிய காய்கறிகளை வாங்கி, குறைந்த விலையில் மக்களுக்குக் கொடுக்க வேண்டும். அதிமுக ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற சூழலில் அப்படி செய்யப்பட்ட நிலையில் திமுக ஆட்சியில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதுகுறித்து தெரிவித்தும் திமுக அரசு செவி சாய்க்கவில்லை.

காய்கறி, மளிகை, கட்டுமானம் என அனைத்துவிதமான பொருட்களின் விலையும் அபரிமிதமாக உயர்ந்துள்ளது. அரசு இப்பிரச்னையில் உடனடியாகத் தலையிட்டு விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவை மாவட்டத்திற்கு இந்த அரசு எந்தத் திட்டத்தையும் கொடுக்கவில்லை. அதுமட்டுமல்ல, அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டத் திட்டங்களையும் முழுமையாக நிறைவு செய்யாமல் இருக்கிறார்கள். அதிமுக ஆட்சியில் கோவை மெட்ரோ இரயில் திட்டத்துக்காக முதல்கட்டமாக நிதி ஒதுக்கப்பட்ட நிலையில், தற்போது மெட்ரோ ரயில் இரண்டு வழிகளில் மட்டும் விடப்படும் என்கின்றனர். அனைத்து வழிகளிலும் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

கோவை டிஐஜி தற்கொலை செய்துகொண்ட வழக்கை சிபிஐ விசாரிக்க உத்தரவிட வேண்டும். யாராவது இந்த சம்பவம் குறித்து உண்மைத்தன்மையை பேசினால் கைது செய்யக்கூடிய நிலை இருகிறது. அதிமுக ஐடி விங் பொதுவான கருத்துக்களைச் சொன்னால்கூட வழக்குப் போடப்படுகிறது. எப்பொழுது சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் வந்தாலும் அதிமுக வெற்றி பெறும். மத்திய அரசு எப்போது விலைவாசியை உயர்த்தினாலும் அப்போதெல்லாம் எடப்படியார் அதனைச் சுட்டிக்காட்டி அறிக்கை கொடுத்து இருக்கின்றார். அதிமுக ஆட்சியில் வெங்காய விலை ஏறியபோது, அதற்கு எடப்பாடியார்தான் காரணம் என்று ஸ்டாலின் கூறினார்.

தற்போதைய தமிழக மதுவிலக்குத் துறை அமைச்சர், நாங்கள் மதிக்கக்கூடியவர் என்றாலும் காலையில் குடிப்பவர்களை குடிகாரர்கள் என்று சொல்வதை ஏற்க முடியாது. காலையில் வேலைக்குச் செல்பவர்கள் குடித்துவிட்டுப் போக முடியுமா? அவருக்கு அந்தத் துறையைக் கொடுத்து இப்படி பேச வைத்திருக்கிறார்கள்.

இந்த ஆட்சியில் மக்களுக்காக அதிகமான ஆர்ப்பாட்டங்கள் நடத்திய கட்சி அதிமுக. சட்டமன்றத்தில் எடப்பாடியார் கேள்விகளுக்கு திமுகவால் பதில் சொல்ல முடியவில்லை. அப்படியிருக்க தமிழகத்தில் சில கட்சிகள் வளர்வதற்காக தலைவராக இருப்பவர்கள், நாங்கள்தான் உண்மையான எதிர்க்கட்சி என்று கூறுகிறார்கள். தற்போது திமுக உடன் கூட்டணியில் உள்ள கட்சிகள் ஏற்கெனவே அதிமுகவுடன் கூட்டணியில் இருந்தபோது பல போராட்டங்களை அரசுக்கு எதிராக நடத்தியவர்கள். ஆனால் தற்போது திமுக சொன்னால்தான் அறிக்கையே கொடுக்கிறார்கள் என்பதால் இப்போது யார் அடிமை என்பதை அவர்களிடமே கேட்க வேண்டும்’ என்றார்.

## தமிழ்நாடு நாள் விழாவினை முன்னிட்டு சிறப்பு புகைப்படக் கண்காட்சி

தி கோவை மெயில்

1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலையான பிறகு, மக்கள் பேசும் மொழிகளின் அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அப்படி மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது சென்னை மாகாணத்தின் சில பகுதிகள் ஹைதராபாத் மற்றும் திருவிதாங்கூர், மைசூர் மாகாணங்களின் பகுதிகளுடன் இணைக்கப்பட்டன. ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்கள் புதிதாக உருவாகின. எஞ்சிய பகுதிகளை கொண்டு நமது சென்னை மாகாணம் என்று உருவாக்கப்பட்டது. சென்னை மாகாணம் என்ற பெயரை 1967ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா, ஜூலை 18ஆம் தேதி தமிழ்நாடு என்று மாற்றி அமைத்தார்.

தமிழ்நாடு நாளை கொண்டாடும் வகையில், கோயம்புத்துர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள், அறிவித்த திட்டங்களின் புகைப்படங்கள், சென்னை மாகாண வரைபடம், தமிழ்நாட்டின் தற்போதைய வரைபடம், உள்ளிட்ட புகைப்படங்கள் கொண்டு அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி தொடங்கி வைத்து பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் பள்ளி மாணவ மாணவியர்கள் பங்கேற்ற தமிழ்நாடு நாள் பேரணியையும் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் பிரதாப், மாவட்ட வருவாய் அலுவலர் ஷர்மிளா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கோகிலா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுமதி, தமிழ்வளர்ச்சித் துறை துணை இயக்குநர் புவனேஸ்வரி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



புகைப்படக் கண்காட்சி மற்றும் தமிழ்நாட்டில் இடம்பெற்ற மாவட்டங்களின் வரைபடங்களை பார்வையிடுகிறார்கள் மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார், மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் பிரதாப் மற்றும் பள்ளி மாணவிகள்.

## மேட்டுப்பாளையம் வனபத்திர காளியம்மன் கோவிலுக்கு சிறப்பு பேருந்துகள்

தி கோவை மெயில்

கோவையிலிருந்து மேட்டுப் பாளையம் வனபத்திரகாளியம்மன் கோவில் குண்டம் விழாவிற்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

தமிழக அரசு போக்குவரத்துக் கழக கோவை மண்டலத்தின் சார்பாக வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கோவை மற்றும் சுற்றுப்புற ஊர்களிலிருந்து மதுரை, தேனி, திருச்சி மற்றும் சேலம் போன்ற ஊர்களுக்கு ஏற்கனவே இயக்கப்பட்டு வரும் வழித்தடப் பேருந்துகளுடன் கூடுதலாக 50 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

மேலும் வரும் 24 மற்றும் 25ஆம் தேதிகளில் மேட்டுப்பாளையம் வன பத்திரகாளியம்மன் கோவில் குண்டம் விழா நடைபெற உள்ளதால் கோவை, மேட்டுப்பாளையம், அன்னூர் மற்றும் சோமனூர் ஆகிய ஊர்களில் இருந்து சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

## இந்துஸ்தான் கல்லூரியில் 'மாணவர்கள் சங்கம்' தொடக்க விழா



கல்லூரி முதல்வர், துறைத் தலைவர் மற்றும் தலைமை விருந்தினர்களுடன், துறையின் நிர்வாகப் பொறுப்பேற்றுக் கொண்ட மாணவர்கள்.

தி கோவை மெயில்

இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், உயிர் தொழில்நுட்பவியல் துறையின் ’மாணவர்கள் சங்கம்’ தொடக்க விழா திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு இந்துஸ்தான் கல்வி மற்றும் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் மற்றும் செயலர் பிரியா சதீஸ் பிரபு ஆகியோர் குத்துவிளக்கேற்றி நிகழ்வை துவக்கி வைத்து, வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்விற்கு தலைமை விருந்தினர்களாக கோயம்புத்தூர் தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் கோயம்புத்தூர் ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கள இயக்குனருமான ராமசுப்ரமணியம், ஐ.எஃப்.எஸ்., பொதுப்பணித்துறை செயல் பொறியாளர் நித்தியன் மணி அரசு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் என்.ஐ.ஜலாலுதீன் ஆகியோர் கலந்துகொண்டு ‘வன பாதுகாப்பு மற்றும் மனித விலங்கு மோதலின் தற்போதைய காட்சிகள்’ என்ற தலைப்பில், சுற்றுச்சூழல் சமநிலையை பராமரிக்கவும் வன விலங்குகளை எவ்வாறு பாதுகாப்பது குறித்தும் சிறப்புரை ஆற்றினார்கள்.

மேலும் மாணவர் சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் கிளப்பின் கீழ் நிகழ்ச்சிகளை நடத்துவதைக் கருத்தில் கொண்டு துறையைச் சேர்ந்த மாணவர்கள் நிர்வாக பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டனர். இந்நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் பொன்னுசாமி, துறையின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் செந்தில்குமார் மற்றும் பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

# 2024 மக்களவைத் தேர்தல்:

# பயம் வந்துவிட்டதா மோடிக்கு?



✍ சாணக்கியன், தி கோவை மெயில்

**மகராஷ்டிரத்தில் சிவசேனை கட்சியில் இருந்து ஏக்நாத் ஷிண்டே, தேசியவாத காங்கிரஸில் இருந்து அஜித்பவார் ஆகியோர் ஆதரவாகத் திரும்பியிருப்பது பாஜகவுக்கு வாக்கு பலம் சற்றுக் கூடியிருக்கலாம். ஆனால், 'ஊழலுக்கு எதிரான தலைவர் மோடி, ஊழலுக்கு எதிரான கட்சி பாஜக' எனும் பிரசாரத்தை முன்னிறுத்தும் பாஜக, ஊழல் கரை படிந்த இருவரையும் தங்கள் கட்சியில் சேர்த்திருப்பதற்கு என்ன பதில் சொல்லப்போகிறது, இதை மக்கள் எப்படி பார்க்கப் போகின்றனர் என்பது எதிர்வரும் மக்களவைத் தேர்தல் முடிவில்தான் தெரியவரும்.** ”

பாஜக தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணிக்கு எதிராக இந்தியா கூட்டணி எனத் திரண்டு நிற்கும் எதிர்க்கட்சிகளால் பிரதமர் மோடியை வீழ்த்த முடியுமா, இந்தியா கூட்டணியின் எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வி நாடு முழுவதும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

நேரு, இந்திராகாந்திக்கு பிறகு இருமுறை அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்த பிரதமர் என்ற பெருமையைப் பெற்றிருக்கும் மோடியை, மீண்டும் மூன்றாவது முறை வெற்றி பெற செய்யக்கூடாது, எப்படியாவது வீழ்த்திவிட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தியா கூட்டணி என்ற உருவத்தில் ஒரே அணிக்கு வருவதற்கு உறுதியேற்றுள்ளன எதிர்க்கட்சிகள்.

என்டிஏ கூட்டணிக்கு பாஜக தான் தலைமை என்ற நிலையில், இந்தியா கூட்டணிக்கு காங்கிரஸால் தலைமை வகிக்க முடியவில்லை. பிகார் முதல்வர் நிதிஷ்குமாரின் முயற்சியால் பாட்னாவில் கூடிய எதிர்க்கட்சித் தலைவர்கள் மீண்டும் 2வது முறையாக காங்கிரஸ் ஒருங்கிணைப்பில் பெங்களூருவில் கூடி கூட்டணிக்கு இந்தியா எனப் பெயர் சூட்டியுள்ளனர்.

அதைத்தொடர்ந்து 11 பேரைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்படும் என்றும், அதற்கு ஒருங்கிணைப்பாளர் யார் என்பது பின்னர் அறிவிக்கப்படும் என்றும் இந்தியா கூட்டணி தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியா கூட்டணி என்ற பெயரில் நாடு முழுவதும் முகவரி தெரிந்த மாநிலக் கட்சிகளுடன் காங்கிரஸ் கட்சி மக்களவைத் தேர்தலை சந்திக்க ஆயத்தமாகி வரும் நிலையில், பாஜகவும் என்டிஏ கூட்டணியை விரிவுப்படுத்தி தாங்களும் வலுவாக இருப்பதாகக் காட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்தியா கூட்டணியில் சில சிறிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன என்றாலும், என்டிஏ கூட்டணியில் லெட்டர் பேடு கட்சிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, அதிக எண்ணிக்கையான கட்சிகள் (38 கட்சிகள்) இருப்பதுபோன்ற தோற்றத்தைக் காட்டியுள்ளது பாஜக.

கடந்த மக்களவைத் தேர்தலில் பாஜகவுடன் இருந்த நிதிஷ்குமார், உத்தவ் தாக்கரே போன்றவர்கள் இப்போது இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கின்றனர். மேலும், அரவிந்த் கேஜரிவால், மம்தா பானர்ஜி போன்றவர்கள் இந்தக் கூட்டணிக்கு வந்திருப்பதும் கூடுதல் பலம் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தமுறை பிகாரில் 40 தொகுதிகளில் 39 இல் வெற்றி பெற்ற பிகார், 48 இல் 41 தொகுதிகளில் வெற்றிப்பெற்ற மகராஷ்டிரம் ஆகியவற்றில் பாஜகவின் பலம் இந்த முறை குறைய வாய்ப்பு இருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். மகராஷ்டிரத்தில் சிவசேனை கட்சியில் இருந்து ஏக்நாத் ஷிண்டே, தேசியவாத காங்கிரஸில் இருந்து அஜித்பவார் ஆகியோர் ஆதரவாகத் திரும்பியிருப்பது பாஜகவுக்கு வாக்கு பலம் சற்றுக் கூடியிருக்கலாம் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

ஆனால், 'ஊழலுக்கு எதிரான தலைவர் மோடி, ஊழலுக்கு எதிரான கட்சி பாஜக' எனும் பிரசாரத்தை முன்னிறுத்தும் பாஜக, ஊழல் கரை படிந்த இருவரையும் தங்கள் கட்சியில் சேர்த்திருப்பதற்கு என்ன பதில் சொல்லப்போகிறது, இதை மக்கள் எப்படி பார்க்கப் போகின்றனர் என்பது எதிர்வரும் மக்களவைத் தேர்தல் முடிவில்தான் தெரியவரும்.

ஏக்நாத் ஷிண்டே, அஜித் பவார் ஆகியோரால் மராத்தா வாக்குகளைக் கொண்டுவர முடியும் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து. ஆனால், மகராஷ்டிரத்தில் தேசியவாத காங்கிரஸ் நிறுவனத் தலைவரான சரத் பவாரை மீறி மராத்தா வாக்குகளை, இவர்களால் திருப்ப முடியுமா என்பது கேள்விக்குறிதான்.

அதேபோல, பிகாரில் நிதிஷ்குமார், தேஜஸ்வி, காங்கிரஸ் கூட்டணி வலுவான வாக்கு வங்கியுடன் இருக்கும் நிலையில், அதை மீறி கூடுதல் வாக்கு வங்கியைப் பெறுவதற்கான முயற்சியில் பாஜக இறங்கியுள்ளது. முன்னாள் முதல்வர் மாஞ்சி, முன்னாள் முதல்வர் உபேந்திர குஸ்வாகா, முன்னாள் மத்திய அமைச்சர் மகன் சிராக் பஸ்வான், அவரது சித்தப்பா பசுபதி பராஸ் ஆகியோரை மீண்டும் என்டிஏ அணிக்குள் கொண்டுவந்தது போன்றவை பிகாரில் பாஜக கூட்டணிக்கு வாக்கு பலத்தை மேலும் அதிகரிக்கக்கூடும். ஆனால், இறுதி யுத்தத்தில் வெற்றி பெறப் போவது யார் என்பது தேர்தல் முடிவில்தான் தெரியவரும்.

கேரளத்தில் மார்க்சிஸ்ட் ஆளும் கட்சி, காங்கிரஸ் பிரதான எதிர்கட்சி என்பதால் இந்தியா கூட்டணி அங்கு அமைய வாய்ப்பில்லை. அதேபோல, மேற்கு வங்கத்தில் மம்தாவுடன் இடதுசாரிகள், காங்கிரஸ் கட்சிகள் கூட்டணி அமைக்க வாய்ப்பு இல்லை என மார்க்சிஸ்ட் தேசியப் பொதுச்செயலர் சீதாராம் யெச்சூரி கூறியிருப்பதால் அங்கும் இந்தியா கூட்டணி அமையுமா என்பது கேள்விக்குறிதான்.

பஞ்சாபில் ஆம் ஆத்மி ஆட்சி, எதிர்க்கட்சி காங்கிரஸ் என்பதால் அங்கும் இந்தியா கூட்டணி அமையுமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அங்கு ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியில் துணை முதல்வராக இருந்த ஓ.பி.சோனியை, பஞ்சாப் ஆம் ஆத்மி அரசு கைது செய்திருப்பது இந்தியா கூட்டணிக்கு வேட்டுவைப்பதுபோல அமைந்துள்ளது.

இதையும் தாண்டி ஆம் ஆத்மி அமைச்சர்கள் இருவர் கைது செய்யப்பட்டதாலும், தில்லி மசோதாவுக்கு காங்கிரஸ் ஆதரவு கொடுத்திருப்பதாலும் இந்தக் கூட்டணிக்கு ஆம் ஆத்மி வந்துள்ளது. குஜராத், தில்லியில் வேண்டுமானாலும் இந்தியா கூட்டணி அமையலாம்.

எதிர்க்கட்சிகள் பிரிந்து நிற்பதால்தான் பாஜக வெற்றி பெறுகிறது என்பது மாயத்தோற்றமே. மத்தியப்பிரதேசம், சத்திஷ்கர், ராஜஸ்தான், ஹிமாசலப்பிரதேசம், உத்தரகாண்ட், அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் 185 தொகுதிகளில் பாஜக காங்கிரஸ் இடையே நேரடிப் போட்டி நடக்கிறது. இதில் பாஜக 85 சதவீத தொகுதிகளில் வெற்றிபெறுவதால்தான் பாஜக ஆட்சிக்கு வருகிறது என்பதுதான் உண்மை. இந்தத் தொகுதிகளில் பாஜகவை, காங்கிரஸ் வீழ்த்தாமல் மீண்டும் எதிர்க்கட்சிகள் கூட்டணி ஆட்சி என்பது குதிரைக்கொம்புதான்.

தென்மாநிலங்களில் தமிழகம், கேரளம், ஆந்திரம் ஆகியவற்றில் என்டிஏ அணிக்கு பெரிய வெற்றி கிடைக்கப் போவதில்லை. கர்நாடகத்தில் தேவகௌடாவின் ஜேடிஎஸ் கட்சி பாஜவுடன் அணி சேர்வதால் மீண்டும் அதிக எண்ணிக்கைத் தொகுதிகளைக் கைப்பற்றலாம் என பாஜக கணக்கு போடுகிறது. ஆனால், கர்நாடகத்தில் காங்கிரஸ் வலுவான ஆட்சி அமைந்திருப்பதன் மூலம் அது எந்த அளவுக்கு சாத்தியம் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்தியா கூட்டணி உருவாகியிருப்பது பாஜகவுக்கு லேசான குடைச்சலைக் கொடுத்திருப்பது என்பது உண்மைதான். என்டிஏ கூட்டணியையும் மீறி மோடி தான் பிரதான பிம்பம் என்ற தோற்றம் இருந்த நிலையில் மீண்டும் என்டிஏ அணியை விரிவாக்கித் தாங்களும் கூட்டணி பலத்துடன் இருக்கிறோம் என்பதை பாஜக காட்டியுள்ளதன் மூலம் மோடி பிம்பத்தைவிட என்டிஏ கூட்டணியைத்தான் பாஜக நம்புகிறதோ என்ற தோற்றமும் உருவாகியுள்ளது.

இந்தியா கூட்டணி உருவாகியிருந்தாலும் இந்த கூட்டணி கடைசி வரை கரை சேர்வதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இந்தக் கூட்டணிக்கு ஒருங்கிணைப்பாளர் யார், கடைசிவரை அனைத்து கட்சிகளையும் கூட்டணியில் தக்க வைக்க முடியுமா என்பது இந்தக் கூட்டணிக்கு காத்திருக்கும் மிகப்பெரிய சவால்.

'என்டிஏவை வெல்லுமா இந்தியா?!' என்பதை காலம்தான் கணிக்கும். நவம்பரில் நடைபெறும் மத்தியப்பிரதேசம், தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தல்கள் இந்தியா கூட்டணியின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடும் என்பதுதான் பெரும்பாலான அரசியல்நோக்கர்களின் கருத்து.

## என்டிஏ-வில் முக்கியத்துவம் பெற்ற எடப்பாடி!

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் அதிமுகவுக்கு கூட்டணி அமையுமா, பாஜக தனித்து களம் இறங்குமா, திமுக கூட்டணி கட்சிகள் சில வெளியேறி அதிமுகவுடன் சேருமா என்ற கேள்விகளுக்கு தில்லியில் நடந்த என்டிஏ கூட்டம் முற்றுப்புள்ளியை வைத்துள்ளது. பிரதமர் மோடி தமிழகம் வரும்போதெல்லாம் காத்திருக்கும் எடப்பாடி பழனிசாமி அலட்சியம் செய்யப்படுகிறார் என்ற தோற்றம் உருவானது. ஒருவேளை ஓபிஎஸ் உடன் பாஜக கூட்டணி அமைத்து எடப்பாடியைத் தனித்துவிடக்கூடும் என்ற தகவலும் வெளியானது. அண்ணாமலையின் அரசியல் நகர்வுகளும் அதுபோலதான் இருந்தன.

ஆனால், இந்தியா கூட்டணி கொடுத்த அரசியல் அழுத்தம், என்டிஏ கூட்டணிக்குள் அதிமுகவைக் கொண்டுவர பாஜகவுக்கு நிர்பந்தத்தை ஏற்படுத்திவிட்டது. அத்துடன், தில்லி என்டிஏ மோடிக்கு வலது பக்கத்தில் நிற்க வைக்கப்பட்டது, பாஜக தேசியத் தலைவர் நட்டா ஹோட்டலுக்கு வெளியே வந்து வரவேற்றது போன்ற பிரதான முக்கியத்துவம் எடப்பாடி பழனிசாமிக்கு கூடுதல் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், லெட்டர் பேடு கட்சிகளை எல்லாம் தில்லிக்கு அழைத்த பாஜக, தன்னை நம்பி கடைசி வரை காத்திருந்த, இப்போதும் இருக்கும் ஓபிஎஸ்ஸை கைவிட்டது எடப்பாடிக்கு கூடுதல் உற்சாகம். ஆனால், என்டிஏ கூட்டத்துக்கு மறுநாள் தில்லியில் நடந்த நாடாளுமன்றக் கூட்டத்துக்கு அதிமுக சார்பில் ஓ.பி.ரவீந்திரநாத்தை அழைத்தது ஓபிஎஸ்க்கு ஓரளவு ஆறுதல். இது எடப்பாடிக்கு கொஞ்சம் நெருடல்தான்.

அதேபோல, வாக்கு பலமே இல்லாத கட்சிகளை எல்லாம் தில்லிக்கு அழைத்த பாஜக, 0.5 சதவீத வாக்குபலம் கொண்ட தேமுதிகவை ஏன் அழைக்கவில்லை என்ற கேள்விக்கு தமிழக பாஜகவினர்தான் பதில் சொல்ல வேண்டும்.

---

# மணிப்பூர் விவகாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும்

**வானதி சீனிவாசன் பேச்சு**

✍ தி கோவை மெயில்

கோவை நவஇந்தியா பகுதியில் உள்ள இந்துஸ்தான் கலை, அறிவியல் கல்லூரியில், மத்திய அரசின் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணை அமைச்சர் நாராயணசாமி தலைமை வகித்தார். கோவை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் பாஜக தேசிய மகளிரணியின் தலைவருமான வானதி சீனிவாசன் வேலைவாய்ப்பு பெற்றவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய வானதி சீனிவாசன், 'சி.பி.எஸ்.இ. மாணவர்கள் பிராந்திய மொழி படிக்க இயலும் என்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு மொழியையும் மதிக்கும் அரசு, பாஜக அரசு என்பது நிரூபணமாகிறது.

மணிப்பூர் விவாகரம் மனித நாகரிகத்திற்கு எதிரான, சகிக்க முடியாத, ஜீரணிக்க முடியாத செயல். அதில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். மணிப்பூர் மாதிரியான பிராந்தியங்களில் அமைதியற்ற சூழலில் பல முடிவுகள் எடுக்கப்படுகிறது. அன்றாட சண்டையில்கூட பெண்களை வைத்து பிரச்னை செய்யும் சமூகத்தின் மனப்பாங்கு மாற வேண்டும்.

கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமிபோல தேர்தல் சமயத்தில் இன்னும் பலர் எங்களுடன் இணைந்து செயல்படுவார்கள். தேமுதிம உட்பட எந்தக் கட்சியையும் பாஜக உதாசீனப்படுத்தாது.

மணீப்பூருக்காக பேசும் காங்கிரஸ் கட்சி, அக்கட்சி ஆளும் மாநிலத்தில் பெண்களுக்கு ஆதரவாக பேசிய அமைச்சரை பதவி நீக்கம் செய்துள்ளது. கட்சி வேறுபாடுயின்றி இந்தியாவில் எந்தப் பெண்ணிற்கு பாதிப்பு ஏற்பட்டாலும் பாஜக அவர்களுக்கு உறுதுணையாக நிற்கும். நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு கட்சியினர் பாஜகவினருடன் இணைய உள்ளார்கள். பாஜகவின் கூட்டணியை விரும்புவர்கள் தனி மனிதராக இருந்தாலும் சேர்த்துக்கொள்வோம்' என்றார்.



---

**கோயம்புத்தூர் வழக்கறிஞர் சங்கம் சார்பில்**

# மறைந்த மூத்த வழக்கறிஞர் குப்புசாமியின் நினைவு புகைப்படம் திறப்பு



டாக்டர் குப்புசாமியின் சிறு வாழ்க்கை வரலாறு புத்தகத்தை வெளியிடுகிறார்கள் கோயம்புத்தூர் வழக்கறிஞர் சங்கத்தினர் மற்றும் விருந்தினர்கள்.

✍ தி கோவை மெயில்

மாவட்டத்தின் பிரபல சிவில் வழக்கறிஞர்களில் ஒருவரான மூத்தவழக்கறிஞர் குப்புசாமியின் (1932 2016) நினைவு நாளை முன்னிட்டு, அஞ்சலி செலுத்தும் விதமாக கோவை வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில், கோவை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள நூலகத்தில் நிறுவப்படவுள்ள அவரது புகைப்படத்திற்கு வெள்ளிக்கிழமை மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதில் கோயம்புத்தூர் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் கே.எம்.தண்டபாணி வரவேற்றுப் பேசுகையில், நீதிமன்றத்தில் டாக்டர் குப்புசாமியின் வாதங்கள் துல்லியமாகவும், விவரங்கள் நிறைந்ததாகவும், எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கும் என்றார். அவர் வாதிட்ட அனைத்து வழக்குகளிலும், சிறந்த முடிவுகளைப் பெற்றார் என்று கூறினார்.

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட நீதிபதி எம்.என். செந்தில் குமார் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத் தலைவர் நீதிபதி (ஓய்வு) எஸ்.பாஸ்கரன், கோவை வழக்கறிஞர் சங்கத் தலைவர் கே.எம்.தண்டபாணி, மூத்தவழக்கறிஞரும், சிபிஐ முன்னாள் அரசு வழக்கறிஞருமான என்.சுந்தரவடிவேலு உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள், விருந்தினர்கள் கலந்து கொண்டு புகைப்படத்தை வெளியிட்டனர். மேலும், இந்நிகழ்ச்சியில் டாக்டர் குப்புசாமியின் சிறு வாழ்க்கை வரலாறு புத்தகமும் வெளியிடப்பட்டது.

---

# புதிய பதிவுத்துறை அலுவலகங்கள் கோவையில் திறப்பு

✍ தி கோவை மெயில்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கோவை உள்ளிட்ட தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில், புதிய பதிவுத்துறை அலுவலகங்களை சென்னையிலிருந்து காணொலி வாயிலாக வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். அதையொட்டி, கோவை கிராஸ்கட் சாலை, சிங்கப்பூர் பிளாஸா வணிக வளாகக் கட்டிடத்தில் நடைபெற்ற, கோவை தெற்கு மாவட்ட பதிவாளர் அலுவலகம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம் (தணிக்கை) அலுவலகம் திறப்பு விழா நிகழ்ச்சியில், கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் துணைப் பதிவுத்துறை தலைவர் சாமிநாதன், கோவை தெற்கு மற்றும் வடக்கு மாவட்டப் பதிவாளர்கள் நிர்வாகம் மற்றும் தணிக்கை (பொறுப்பில்) சிவராஜூ, பிரபாவதி, காந்திபுரம் பகுதிச் செயலாளர் சேதுராமன், வட்டக்கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், பதிவுத்துறை அலுவலர்கள்.

வாரஇதழ் | தி கோவை மெயில் | ஜூலை 23 - 29, 2023 | 5

# செவிலியர்கள்தான் மருத்துவமனையின் தேவதைகள்

**டாக்டர் கே.ஜி.பக்தவத்சலம், தலைவர், கே.ஜி. மருத்துவமனை**





தி கோவை மெயில்

சர்வதேச செவிலியர் தினம், செவிலியர்கள் குறித்து கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் கே.ஜி.பக்தவத்சலம் கூறியதாவது,

'மருத்துவமனையில் துப்புரவுத தொழிலாளர்கள், காவலர்கள், வண்டி தள்ளுபவர்கள், ஓட்டுநர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், கிளினிக்கல் மேனேஜர்கள், மருத்துவர்கள் என ஏராளமானவர்கள் பணிபுரிந்தாலும் செவிலியர்கள்தான் மருத்துவமனையின் தேவதைகள். செவிலியர்கள் இல்லை என்றால் எந்த ஒரு மருத்துவமனையும் இயங்காது.

இத்தாலியைச் சேர்ந்த பிளாரன்ஸ் நைட்டிங்கேல்தான் செவிலியர் பணியை முதன்முதலில் ஆரம்பித்தவர். போர்க்களத்தில் அடிபட்டவர்களுக்கு கட்டுப்போடுதல், உணவு அளித்தல் என ஆரம்பித்ததுதான் இந்த செவிலியர் பணி.

கே.ஜி. மருத்துவமனையில் கடந்த 50 வருடங்களில் பணிபுரிந்த செவிலியர்கள் அனைவரின் பெயர்களும் இன்னும் என் நினைவில் உள்ளது. 24 மணி நேரத்தில் நோயாளிகளை மருத்துவர்கள் 2 மணி நேரம்தான் சந்திப்பார்கள். ஆனால், செவிலியர்கள் 3 ஷிப்ட் என்ற கணக்கில் 24 மணி நேரமும் நோயாளிகளை அவர்களின் உடனிருந்து ஒரு குடும்பத்தினரைப்போல் பாதுகாக்கின்றனர்.

ஓட்டுநர், கொத்தனார், மீனவர் போன்ற வசதி வாய்ப்பு அதிகம் இல்லாத குடும்பத்தில் பிறந்து படித்து முன்னேறி வந்தவர்கள்தான், செவிலியர்கள். கே.ஜி. மருத்துவமனையில் பயிற்சி பெற்ற செவிலியர்கள் தற்போது உலகம் முழுவதும் பணியாற்றி வருகின்றனர்.




கொரோனா சமயத்தில் பணிபுரிந்த ஒவ்வொரு செவிலியர்களும் போர்வீரர்களே. அவர்களின் பணியைப பார்த்து மா.சுப்பிரமணியம் தலைமையில் 100 செவிலியர்களுக்கு கொரோனா போர்வீரர்கள் என்ற விருதை வழங்கினோம்.

செவிலியர் பணிக்கு ஆண்களைவிட பெண்கள்தான் அதிகம் வருகின்றனர். ஏனெனில், ஒரு குடும்பத்தில் அம்மாதான் குழந்தைகளையும் குடும்பத்தினரையும் நலமாகப பார்த்துக் கொள்கின்றார். அதுபோன்ற பெருந்தன்மையான மனது பெண்களுக்குத்தான் உள்ளது. அதனால்தான் இந்த செவிலியர் பணியில் பெண்கள் அதிகம் உள்ளனர்.

செவிலியர் பணி என்பது இஷ்டப்பட்டு தேர்ந்தெடுத்து வருகின்ற பணி ஆகும். ஒரு மருத்துவர், பணி நேரத்தில் தூங்குவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆனால் செவிலியர்கள் பணி நேரத்தில் தூங்கியதாக சரித்திரம் இல்லை.

அப்படிப்பட்ட செயல்வீரர்களான செவிலியர்களைப பாராட்டவே சர்வதேச செவிலியர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆனால், கே.ஜி. மருத்துவமனையில் செவிலியர் வாரம் என அமைத்து வாரம் முழுவதும் செவிலியர்களைப் பாராட்டுவோம். கே.ஜி. மருத்துவமனையின் நற்பெயருக்கும் முன்னேற்றத்திற்கும் எங்கள் தாய்க்குலமான செவிலியர்கள்தான் காரணம்.

ஆசிரியர் பணிக்குப் படித்து, கல்கத்தாவில் இருந்த ஏழைகளின் உடல் நலனைக் காக்கும் பணியில் ஈடுபட்டு அவர்களுக்கு உணவு அளித்து பாதுகாத்தவர் மதர் தெரேசா. அவர் செவிலியர் பணியை செய்த ஒரு ஆசிரியர். அவரை இன்றுவரைப போற்றும்போது, செவிலியருக்கு பணிக்கெனவே படித்து செவிலியர் ஆனவர்கள் எவ்வளவு மதிப்புமிக்கவர்கள் என யோசிக்க வேண்டும்.

எனக்கு உடல்நிலை சரியில்லாமல் 10 தினம் படுக்கையிலேயே இருந்தேன். அந்த நேரத்தில் என் அம்மாவைப போன்று செவிலியர்கள் என்னை கவனித்துக் கொண்டனர். செவிலியர்தான் நம்மைகே காப்பாற்ற வந்த அம்மா. மனைவியோ சகோதரியோ செய்யாத வேலைகளைக்கூட செவிலியர்கள் நோயாளிகளுக்காக செய்வார்கள். அவர்கள் மருத்துவர்களின் கோபத்தையும் பொறுத்துக்கொள்கின்றனர். இப்படிப்பட்ட செவிலியர்களை நாம் அனைவரும் மதிக்க வேண்டும் என கோரிக்கை வைக்கிறேன்.

மருத்துவர் பணியும் செவிலியர் பணியும் கடவுளின் ஆணையாகவே கருதுகிறேன். மற்ற துறைகளில் பணிபுரிபவர்களின் குணநலன்கூட வித்தியாசப் படலாம். ஆனால் அதிகமான செவிலியர்கள், நல்ல மனம் படைத்தவராகத்தான் இருப்பார்கள்' என்றார்.

## பிறர் நலனே தன் நலம் எனக் கருதுபவர்கள் செவிலியர்கள்



செவிலியர் பணி மற்றும் சமூகத்திற்கு அவரது தேவை, செவிலியர் பணியில் தனது பயணம் குறித்து கே.ஜி. மருத்துவமனையின் செவிலியர் தலைமை நிர்வாக அதிகாரி டெல்பின் ஜேம்ஸ் கூறியதாவது,

'கடவுளிடம் இருந்து அழைப்பு வரவில்லை என்றால் இந்தப் பணியை செய்ய முடியாது. செவிலியர்கள் செய்வது தொழிலல்ல, அது சேவை. இந்த வார்த்தையின் மூலமே இப்பணியின் தனித்தன்மை நமக்குப் புரியும்.

பொதுவாக, "தன்நலம் கருதாமல் பிறர் நலம் கருதி" என நாம் கூறுவோம். ஆனால் செவிலியர்கள் பிறர் நலன் தான் தன்நலம் எனக் கருதுபவர்கள். கொரோனா சமயத்தில் அனைவரும் சக மனிதரைத் தொடுவதற்கே அஞ்சினர். மிகப்பெரிய பணக்காரர் என்றாலும் அவருக்கு நோய்த்தொற்று இருந்தால், அவரின் குழந்தைகளும் மனைவியும் அவருடைய அறையின் வெளியில்தான் இருந்தனர். மேலும், அணிவதற்குக் கடினமாக இருந்தாலும் பி.பி.ஈ. என்ற கவச ஆடையைப் போட்டுக்கொண்டு நோயாளிகளின் நலனை தன்நலமாகக் கருதி செயல்பட்டவர்கள், செவிலியர்கள். இவ்வாறு கொரோனா காலத்தில் அர்ப்பணிப்புடன் கூடிய தங்களது சேவைகளால், செவிலியர்கள்தான் மருத்துவமனையின் முதுகெலும்பு என நிரூபித்தனர்.

எனக்கு திருச்சி மருத்துவமனையில் 15 வருட அனுபவமும் கே.ஜி. மருத்துவமனையில் 5 வருட அனுபவமும் உள்ளது. எனது அனுபவத்தில் கொரோனா காலத்தை மறக்க இயலாது. காலை 7 முதல் இரவு 11 மணி வரை தொடர்ச்சியாக வேலை இருந்து கொண்டேயிருந்தது. அப்போது 'இவ்வளவுதான் கொரோனா, நம்மால் முடியும்' என்று துணிந்து பணி செய்தேன்.

சிறுவயதில் என் தாத்தா "நீ ஏன் செவிலியர் ஆகக் கூடாது" எனக் கேட்டதன் விளைவாக, 16 வயதில் செவிலியர் பணிக்குச் சேர்ந்தேன். மற்றவர்களுக்கு சேவை செய்வதில் வரும் திருப்தி வேறெதிலும் கிடைப்பதில்லை என அப்போதே உணர்ந்தேன். நோயாளிகள் "இவர்தான் என்னை அன்போடு கவனித்துக்கொண்டார்" என சிரித்துக்கொண்டே சொல்லும்போது கிடைக்கும் சந்தோஷம், கோடி ரூபாய் கிடைத்தாலும் கிடைக்காது.

செவிலியர் பணி, 20 வருடத்திற்கு முன்பு இருந்ததுபோல் தற்போது சுலபமல்ல. ஏனெனில், நோயாளிகள் இணையதளத்தில் நோயைப் பற்றியும், சிகிச்சை முறை குறித்தும் நன்கு அறிந்துகொள்கின்றனர். இந்நிலையில், இதையெல்லாம் கவனத்தில்கொண்டு எதற்கும் தயார் நிலையில் நவீனமாக செவிலியர்கள் இருக்க வேண்டியுள்ளது.

மருத்துவத் துறையைப்போலவே செவிலியர் துறையிலும் தனித்தனிப் பிரிவுகள் உள்ளன. பொதுவாக, செவிலியர்கள் ஒரே மாதிரிதான் கற்றுக்கொண்டு வருவார்கள். மருத்துவமனைக்கு வந்தபிறகு தொடக்க மதிப்பீட்டின் மூலமும், அவர்களின் ஆர்வத்தைப் பொருத்தும் அவர்களுக்கான பிரிவுகளுக்கேற்ப சிறப்புப் பயிற்சி அளிப்போம். அதன் பின்பு அவர்களுக்கு தனித்தனிப் பிரிவில் சான்றளிக்கப்படும்.

கே.ஜி. மருத்துவமனைத் தலைவர், எங்களை தேவதைகள் என்று அழைப்பார். அவர் கொடுக்கும் உற்சாகத்தால்தான் எங்களால் தொடர்ந்து சிறப்பாக பணியாற்றமுடிகிறது. அதனால்தான், 20 வருடத்திற்கு முன்பே, *KG*யை *Kingdom of God* என்று ஒரு நோயாளி அழைத்தார். இங்கு சேவை செய்வதை கோயிலில் சேவை செய்வதைப்போல எண்ணுகிறோம். நோயாளிகளை உறவினராகக் கருதி தனிக் கவனம் செலுத்துவோம் என்பதைக் கொள்கையாக வைத்துள்ளோம். எங்கள் மருத்துவமனைக்கு என்.ஏ.பி.எச். சான்றிதழ் இருப்பதைப்போல, செவிலியருக்கு நர்சிங் எக்ஸலன்ஸ் என்ற தரச் சான்றிதழும் வாங்கியுள்ளோம்' என்றார்.

## நோயாளிகளின் பாதுகாப்பில் கவனம் குறைந்ததில்லை



கே.ஜி. மருத்துவமனை இருதய அறுவைசிகிச்சைப் பிரிவில் 23 ஆண்டுகள் நர்சிங் மேனேஜராகப பணியாற்றும் செவிலியர் முத்துக்குமாரி கூறியதாவது,

'கார்டியோ அறுவைசிகிச்சை முடிந்துவரும் நோயாளிகளை சீராக கவனித்துக்கொள்வதே எங்களுடைய முக்கியமான பணியாகும். ஒரு நாளில் நான்கு முதல் ஆறு நோயாளிகள் என மாதத்திற்கு 50 முதல் 60 நோயாளிகளைப் பாதுகாப்போம்.

கே.ஜி. மருத்துவமனைக்கு கோயம்புத்தூரில் இருந்து மட்டுமின்றி பல மாவட்டங்களில் இருந்தும் பலதரப்பட்ட நோயாளிகள் வருகின்றனர். பணக்காரர், ஏழை என எவ்விதப் பாகுபாடும் இன்றி அனைவருக்கும் வெளிநாடுகளில் இருக்கும் வசதிகளைப்போல சிகிச்சை அளிக்கிறோம். மேலும் வசதி குறைந்த நோயாளிகளுக்கு எங்கள் ஜி.பி. ஐயா பெரிதும் உதவுகின்றார்.

இங்குள்ள அனைத்து செவிலியர்களும் நோயாளிகளைத் தன் குடும்பத்தாரைப்போல ஒரே மாதிரியாகக் கவனித்துக் கொள்கிறோம். மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சக ஊழியர்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து சகிப்புத்தன்மை மற்றும் அன்புடன் ஒவ்வொரு உயிரின் மதிப்பையும் கருத்தில்கொண்டு இரவு, பகல் பாராமல் தங்களது பணியை முழுமையாக செய்கிறோம்.

மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம், பெங்காலி எனப் பல்வேறு மொழி நோயாளிகளையும் கனிவுடன் கையாள்கிறோம். இதனால் நோயாளிகளின் பாதுகாப்பில் சிறிதும் கவனம் குறைந்ததில்லை.

பாதுகாப்பான, திருப்தியான சூழலில் செவிலியராகப் பணியாற்றுவதற்கு முக்கிய காரணமாகிய ஜி.பி. ஐயா மற்றும் மருத்துவர்களுக்கு எனது நன்றிகள்' என்றார்.

## செவிலியராகப் பணியாற்றுவதில் பெருமை



கே.ஜி. மருத்துவமனையில் கரோனரி கேரிங் யூனிட்டில் நர்சிங் மேனேஜராகப் பணியாற்றும் செவிலியர் கோமதி கூறியதாவது,

'எங்கள் மருத்துவமனையில் ஒவ்வொரு வருடமும் புதிதாக பணிக்கு வரும் செவிலியர்களுக்கு சிறப்பான பயிற்சி அளித்து வருகிறோம். குறிப்பாக, நோயாளிகளிடம் எப்படி பேசுவது, அவர்களின் பய உணர்ச்சியை எவ்வாறு விலக்கி தைரியம் கொடுப்பது என்பது குறித்து கடந்த 40 வருடங்களாக எங்களது சேர்மன் ஜி.பி. ஐயா கற்றுக்கொடுத்துள்ளார்.

முன்பிருந்த காலங்களில் மாரடைப்பு வந்தால் ஆக்சிஜன் மற்றும் மார்ஃபிங் ஊசி அளித்து சிகிச்சையைத் தொடங்குவார்கள். ஆனால் தற்போது உயர் தொழில்நுட்பத்தின் நவீன கருவிகளைப் பயன்படுத்தி சிகிச்சையைத் தொடங்குகின்றோம்.

அதாவது, கோல்டன்ஹவர் என்னும் மாரடைப்பு வந்த முதல் ஆறு மணி நேரத்தில் நோயாளிகளுக்கு லோடிங் டோஸ் அளித்து உடனடியாக கேத்லேப் எடுத்துச் சென்று அடைப்பு உள்ளதா என்று கண்டறிந்தவுடன் மருத்துவர்கள் நோயாளிகளுக்கு தைரியத்தையும் ஆதரவையும் கொடுத்து சிகிச்சையைத் தொடங்குகின்றனர்.

மேலும் முதல்நாள் ஆஞ்சியோ பிளாஸ்டிக்ஸ் சர்ஜரி செய்தவுடன், இரண்டாவது நாள் மருத்துவரின் கண்காணிப்பில் வைத்து மூன்றாவது நாள் எவ்வித உயிர் சேதமின்றி டிஸ்சார்ஜ் செய்வதால் நோயாளிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைகின்றனர்.

உலகில் தாயின் அன்புதான் உயர்ந்தது என்பார்கள். அதேபோல நீங்களும் எங்களைத் தாயிற்கு ஈடாகக் கவனித்துக்கொள்கின்றீர்கள் என்று நோயாளிகள் கூறுகையில் செவிலியர்களாகிய எங்களுக்கு பெரும் ஆனந்தம் கிடைக்கின்றது. இதனால் மற்ற வேலைகளைவிட செவிலியராகப் பணியாற்றுவதில் மிகவும் பெருமை அடைகின்றேன்' என்றார்.

## ஏழைகளின் கடவுள் ஜி.பக்தவத்சலம் ஐயா



கடந்த 40 வருடங்களாக கே.ஜி. மருத்துவமனையில் பணிபுரிந்துவரும் செவிலியர் மேலாளர் நிர்மலா தனது மருத்துவப் பணி குறித்து கூறியதாவது,

'இங்கு பணிக்கு சேரும்போது எனக்கு 17 வயது. எந்த வேலை கொடுத்தாலும் செய்வேன் எனக் கூறி பணியில் சேர்ந்தேன். முதல் ஒரு வருடம் உதவி செவிலியராக பணிபுரிந்தேன். பிறகு, கே.ஜி. மருத்துவமனையில் செவிலியர்களுக்கான டிப்ளமோ படித்து முடித்தேன்.

இயலாதவர்களுக்கு உதவுவதுதான் செவிலியர்களின் பணி. அதை நாங்கள் மிகவும் ஆர்வமாக செய்கிறோம். ஒருவரின் கழிவுகளைத் துடைப்பது முதல் அவசர சிகிச்சை வரை அனைத்தையும் இரவு, பகலாக செய்கிறோம். அதற்கான அடிப்படைப் பயிற்சி முதல் அனைத்துப் பயிற்சிகளும் கே.ஜி. மருத்துவமனையில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இங்கு தினமும் செவிலியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது.

நான் பணிபுரியும் பிரிவில் அனைத்து விதமான நோயாளிகளும் அனுமதிக்கப்படுவார்கள். திடீரென நோயாளிகளின் உடல்நிலை மோசமாக மாறிவிடும். அதுபோன்ற சூழ்நிலைகளில் விரைவாக செயல்பட்டு மருத்துவர்களுக்கு தகவல் அளித்து உடனடியாக சிகிச்சைகளை மேற்கொள்வோம். எந்த மாதிரியான நோயாளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், நோயாளிகளை எவ்வாறு கையாள வேண்டும் என அனைத்தும் இங்கு கற்பிக்கப்படுகிறது.

'கோவை மாநகரின் மாமனிதர்' எங்கள் கே.ஜி. மருத்துவமனையின் சேர்மன் அவர்கள். அவரால்தான் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களின் குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அவர் காட்டிய வழியில் சென்றதால்தான் இந்த அளவிற்கு நாங்கள் முன்னேறி வந்துள்ளோம். அவர் மிகவும் எளிமையானவர். சாதாரண பிளாஸ்டர் ஒட்டுவது முதல் ஐ.சி.யூ. நோயாளிகளுக்கான சிகிச்சை வரை அனைத்தையும் கண்காணித்து எங்களிடம் கேட்டு தெரிந்து வைத்திருப்பார். அவர் எங்களுக்கு கற்றுத்தந்த பாடத்தை வைத்துத்தான் நாங்கள் பணிபுரிந்து வருகிறோம். அதையே எங்களுக்கு அடுத்து வரும் செவிலியர்களுக்கும் கற்றுக் கொடுக்கிறோம்.

எனது மகளின் பிரசவத்தின்போது சிக்கலான நிலை ஏற்பட்டது. அப்போது, எங்கள் மருத்துவமனை மருத்துவர் சந்திரகலா மற்றும் சேர்மன் ஆகியோர் நேரடியாக கண்காணித்து எனது மகளையும் குழந்தையையும் காப்பாற்றினர். மருத்துவமனையில் நான்கு மாதங்கள் எனது மகள் பெற்ற சிகிச்சைக்கு, சுமார் மூன்றரை லட்சம் வரை கட்டணம் வந்தது. சிகிச்சை முடிந்து கிளம்பும்போது, 'உங்களால் எவ்வளவு பணம் கட்ட முடியுமா அதை மட்டும் கட்டுங்கள்' எனக் கூறினார். இந்த வார்த்தைகளைக் கூற பெரிய மனது வேண்டும். அந்தத் தருணத்தை என்னால் மறக்கவே முடியாது. அவர், ஏழைகளின் கடவுள்' என்றார்.

## செவிலியர்கள் பணி புனிதமானது



கே.ஜி. மருத்துவமனையின் செவிலியர் மேலாளர் சந்திரா தனது பணி அனுபவம் குறித்து கூறியதாவது,

'என் அப்பாவும் கே.ஜி. மருத்துவமனையின் தலைவரும் நண்பர்கள் என்பதால், நான் எனது பள்ளிப் படிப்பை முடித்ததுமே இங்கேயே பயிற்சி பெற்று செவிலியராக கடந்த 29 வருடமாக பணிபுரிகின்றேன்.

எனக்கு செவிலியர் பணியில் அதீத ஆர்வம் இருந்தது. ஆரம்பகாலக் கட்டத்தில் மூத்த செவிலியர்கள் எந்தவிதப் பாகுபாடும் இல்லாமல் எனக்கு நிறையக் கற்றுக்கொடுத்தனர். ஒரு அப்பா தன் குழந்தைக்குக் கற்பிப்பதுபோல, கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் எங்களுக்குக் கற்றுக்கொடுத்துள்ளார். மருத்துவர் பணியில் இல்லை என்றாலும் எங்களால் மட்டுமே நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என்ற அளவிற்கு எங்களுக்குப பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் இரவு மணி 2, 3 போன்ற நேரங்களில் நோயாளிகள் வரும்போது அவர்களுக்கு என்ன பிரச்னை, என்ன செய்ய வேண்டும் என்று விளக்குவார் ஜி.பி. ஐயா. அதுவே எங்களுக்கு இப்போது நல்ல அனுபவமாகப பழகிவிட்டது.

கொரோனா காலகட்டத்தில் பணி செய்ய எங்கள் குடும்பத்தினர் மறுத்தனர். அதையெல்லாம் எதிர்த்துத்தான் பணிபுரிந்தோம். நோயாளிகள் அருகில் குடும்பத்தினரே வராதபோதும், அவர்களுக்குத் தேவையான அனைத்துமே செவிலியர்கள் நாங்கள் செய்தோம். அந்த காலகட்டத்தில் பணிபுரிந்தது மிகவும் கடினமாக இருந்தது. இதனால் குடும்பத்தினருக்கும் கொரோனா தொற்று ஏற்படுமோ என்ற பயமும் இருந்தது. ஆனாலும் எனக்கு தொற்று ஏற்படவில்லை. செவிலியர் இருக்கும் குடும்பத்தில் நோய் ஏற்படாமல் கடவுள் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. அதை நிரூபிக்கும்படியாகத்தான் என் அனுபவங்களும் இருந்தன. ஒரு செவிலியராக இருப்பதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் எங்கள் அனைவரிடமும் ஒரே மாதிரியாக நடந்துகொள்வார். தவறுகள் செய்தாலும் தண்டனை தராமல் மன்னித்து ஏற்றுக்கொள்வார். அவரால்தான் நான் தற்போது செவிலியர் மேலாளராக உள்ளேன்' என்றார்.

**கொரோனா சமயத்தில் பணிபுரிந்த ஒவ்வொரு செவிலியர்களும் போர்வீரர்களே. 100 செவிலியர்களுக்கு கொரோனா போர்வீரர்கள் என்ற விருதை வழங்கினோம்.**

## கே.ஜி. மருத்துவமனையில் செவிலியர்கள் தினமும் படிக்கனும்..!



செவிலியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவது தொடர்பாக கே.ஜி. மருத்துவமனை செவிலியர் பயிற்சியாளர் விஜயராணி கூறியதாவது,

'செவிலியர்கள் தற்போதைய சிகிச்சை மற்றும் பராமரிப்பு முறைகளைக் கட்டாயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காக தினமும் இங்குள்ள அனைத்து செவிலியர்களுக்கும் பல்வேறு பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

தினசரி 12 முதல் 1 மணி வரை பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. சில நேரங்களில் வகுப்புகளில் செவிலியர்கள் கலந்துகொள்ள முடியாமல் போனால் அவர்களுக்கென மாலை நேரத்தில் வகுப்பு எடுக்கப்படும்.

நர்சிங் படிப்பு முடித்து இங்குவரும் செவிலியர்கள் தங்கள் படிப்பை முடித்து நீண்டகாலம் ஆகிஇருக்கும் வேளையில், தற்போது நவீனமயமாகி வரும் சிகிச்சை முறைகளைக் குறித்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும், தற்கால நடைமுறைக்கேற்ப அவர்கள் தங்களைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே தினமும் பயிற்சி வழங்கப்படுகிறது.

கே.ஜி. மருத்துவமனையில் அனைத்து விதமான மருத்துவ வசதிகளும் உள்ளன. அதேபோல் நர்சிங் பணிக்காக புதிய இயந்திரங்கள் வரும்போது அதனை உடனடியாக மருத்துவமனை நிர்வாகம் எங்களிடம் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறது. மேலும், நோயாளிகளிடம் நடந்து கொள்ளும் முறை குறித்தும், செவிலியர்களின் தனிப்பட்ட பிரச்னைகளை கையாளவும் அவர்களுக்கு கவுன்சிலிங் வழங்கப்படுகிறது' என்றார்.

## தரமான சிகிச்சைக்கு மட்டுமே முக்கியத்துவம்



கடந்த 28 வருடங்களாக இருதய அறுவை சிகிச்சைப் பிரிவில் பல்வேறு இடங்களில் பணியாற்றியும், தற்போது கே.ஜி. மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு மேலாளராகப் பணிபுரியும் ராஜேஸ்வரி கூறியதாவது,

'நான் பார்த்தவரை கே.ஜி. மருத்துவமனையில் இருப்பதுபோன்ற தரமான இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு வேறு எங்கும் இல்லை. எங்களது சேர்மன் அவர்கள் எந்த விதத்திலும் தரத்தில் சமரசம் செய்துகொள்ள மாட்டார். கே.ஜி. மருத்துவமனையைப் பொருத்தவரை தரமான சிகிச்சைக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படும்.

எங்களது இருதய அறுவை சிகிச்சைப் பிரிவில், தினமும் மூன்று அல்லது நான்கு அறுவை சிகிச்சைகள் செய்கிறோம். ஆரம்ப கட்டத்தில் இருந்த தொழில்நுட்பத்திற்கும் இப்போது பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்திற்கும் பெரும் வித்தியாசம் உள்ளது. உலக அளவில் தற்போது ஏராளமான நவீனத் தொழில்நுட்ப அறுவை சிகிச்சைக் கருவிகள் வந்துவிட்டன. அவை அனைத்தும் எங்கள் கே.ஜி. மருத்துவமனையில் உள்ளது சிறப்பு.

செவிலியராக இருந்தாலும், அவர்கள் ஒரு மருத்துவரைப்போல எங்களுக்கு அனைத்தையும் கற்பித்து வழி நடத்துகின்றனர். ஆரம்ப காலத்தில் செவிலியர் பணியில் இணைந்தபோது சிறிது பயம் இருந்தது. நாளடைவில் அந்த பயம் விலகிவிட்டது. மேலும், பணிபுரியும் மருத்துவமனை நிர்வாகமும் மருத்துவர்களும் நம்மை ஊக்குவித்து வழிநடத்தும்போது பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

அந்த வகையில் நமது கே.ஜி. மருத்துவமனையில்தான், ***Minimal Invasive Cardiac Surgery*** எனும் அறுவை சிகிச்சை முறை குறித்து கற்றுக்கொண்டேன். தமிழ்நாட்டில் இங்குதான் அதிகமாக இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது' என்றார்.

## நோயாளிகள் மீது முழு அக்கறை காட்டுவதுதான் எங்கள் சிறப்பு



கே.ஜி. மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு மேலாளர் சாந்தகுமாரி கூறியதாவது,

